சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி, போடிநாயக்கனூர்

**A**

# காலாண்டுத் தேர்வு 2023
# தமிழ்

**வகுப்பு – 8**

**கால அளவு : 2.30 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 100**

## பகுதி – 1

**I. சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.** **10x1 = 10**

1. கற்றவருக்கு அழகு தருவது __________.
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) உடை ஈ) கல்வி

2. தமிழர்கள் மருத்துவத்தில் மருந்து என்பது __________ நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்

3. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ____________ மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

4. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள்
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

5. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டவர்
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) வ. உ. சிதம்பரனார்

6. செஞ்சொல் மாந்தரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

7. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் __________ யும் ஓட்டிவிடும்.
அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை

8. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ________________________.
அ) அடக்கமுடைமை ஆ) நாணமுடைமை
இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

9. எட்டாம் வேற்றுமை __________________ வேற்றுமை என அழைக்கப்படுகிறது.
அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

10. 'தமிழ்த் தென்றல்' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) கவிமணி ஆ) பாரதி இ) திரு.வி.க. ஈ) பாரதிதாசன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1 = 5**

11. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று __________.

12 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.

13. கலப்பில் __________ உண்டென்பது இயற்கை நுட்பம்.

14. 'நெடுமை + தேர்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

15. உடனிகழ்ச்சிப் பொருளில் __________ வேற்றுமை வரும்.

**III. பொருத்துக.** **5x1 = 5**

| | | |
|---|---|---|
| 16. கற்றவர் | – | வாணிதாசன் |
| 17. வேர்ட்ஸ்வொர்த் | – | நீலகேசி |
| 18. படித்த பள்ளி | – | நடுவுநிலை |
| 19. ஐஞ்சிறுங்காப்பியம் | – | மக்கள் |
| 20. சான்றோர் | – | பெயரெச்சம் |

## பகுதி– II

**IV. அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

21. 'ஓடை ஆட உள்ளம்...' எனத் தொடங்கும் பாடல்.

**(அல்லது)**

'கற்றோர்க்கு' எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடல்.

2 'தன்குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறள்.

## பகுதி – III

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x2=10**

23. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

24. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

25. சான்றோர்க்கு அழகாவது எது?

26. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

27. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

28. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?

29. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x2=10**

30. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

31. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

32. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

33. வினைமுற்று என்றால் என்ன?

34. கருத்தாப் பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

35. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

36. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) வருக

ஆ) கேட்டார்

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x3=15**

37. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
38. தமிழ்வழிக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறுவன யாவை?
39. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?
40. 'கல்லாமை' குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றைக் கூறுக.
41. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
42. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
43. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

**VIII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5x2=10**

44. தொகைமரபுச் சொல்லை எழுதுக.

    அ) ஆட்டு ____________ ஆ) ஆ ____________

45. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.

    அ) கடமையைச் செய் ______________

    ஆ) ஆ! புலி வருகிறது! ______________

46. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

    அ) மடை திறந்த வெள்ளம் போல் ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

47. சொற்களைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்குக.

    தேன், சிட்டு, கூடு, குருவி

48. திருக்குறளைச் சீர் பிரித்து எழுதுக.

    1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.
    2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

49. கலைச்சொல் எழுதுக.

    அ) Epigraph ஆ) Allergy

## பகுதி–V

**IX. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** **5x1=5**

50. பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.

**வினாக்கள்:**

அ) பழங்காலத்தில் எவற்றில் எழுதினர்?

ஆ) எழுத்துகளின் வடிவங்கள் எவ்வாறு அமைந்தன?

இ) நேர்க்கோடுகள் எவ்விடங்களில் பயன்படுத்தப்பட்டன?

ஈ) இப்பத்தியில் அமைந்துள்ள எதிர்ச்சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

உ) 'எழுதினர்' – இவ்வினைமுற்றிற்கான பெயரெச்சம் எழுதுக.

## பகுதி–VI

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **3x8=24**

51. அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்? அதற்கான காரணத்தை விளக்குக.

52. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
(முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் –நூலகத்திலுள்ளவை – படிக்கும்முறை – முடிவுரை)

**(அல்லது)**

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

53. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி உரையாடல் வடிவில் எழுதுக.

**(அல்லது)**

ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.